நகராட்சி அலுவலகம்
திருவத்திபுரம்.

மன்ற கூட்ட அறிவிப்பு

திருவத்திபுரம் நகரமன்றத்தின் அவசர மன்ற கூட்டம் 31.05.2021 ஆம் நாள் திங்கள்கிழமை காலை 11.00 மணிக்கு நகரமன்றத்தின் கூட்டம் கீழ்கண்ட பொருளை முடிவு செய்ய நடைபெற உள்ளது.மேற்படி கூட்டத்தில் துறை சார்ந்த அலுவலர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தனி அலுவலர்,
திருவத்திபுரம் நகராட்சி

பொருள் எண் : 1

திருவத்திபுரம் நகராட்சிக்கு சொந்தமான TN 25 AV 0245 ஈப்பு வாகனத்தில் பழுதடைந்த பாகங்களை பழுது நீக்கம் செய்ய ஜெயின் கார்ஸ் ஆட்டோ சேல்ஸ் (பி) லிமிடேட், திருவண்ணாமலை நிறுவனத்திற்கு வாகனம் எடுத்து செல்லப்பட்டு பழுது நீக்கம் செய்ய உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி பழுது நீக்கம் செய்ய தோராய தொகை ரூ.60000–யை சம்மந்தப்பட்ட நிறுவனத்திடம் இருந்து பெறப்படும் பட்டியல் தொகையினை வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்:767/2021/இ1

பொருள் எண் :2

திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு பணி பாதுகாப்பு நடவடிக்கையின் பொருட்டு இந்நகரின் பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் உறுதி செய்யப்பட்ட பகுதிகளில் தகுந்த பாதுகாப்பு பணி மேற்கொள்ளவும், நோய் தொற்று அருகாமையில் பரவாமல் இருக்க பாதிக்கப்பட்ட பகுதியினை தடுப்பு வேலி அமைத்து எச்சரிக்கை பதாகைகள் கொண்டு வெளி நபர்கள் யாரும் அப்பகுதிக்குள்ளாக செல்லாமல் இருக்க வேண்டி தகரத்தால் அப்பகுதிகளை தற்காலிகமாக அடைத்தல் பணி மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.5.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொண்டமைக்கும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்:769/2021/இ1

பொருள் எண் :3

திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள திருவத்தூர் நவீன தகன எரிவாயு ( LPG Crematorium) கட்டடத்தில் உட்புறம் மற்றும் வெளிபுறம் கண்காணிப்பு மறைக்காணி (CCTV) பொருத்துதல் பணி மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரு.31000.00 யை கொண்டு உள்ளூர் நிறுவனம் மூலம் விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்:791/2021/இ1

பொருள் எண் : 4

திருவத்திபுரம் நகராட்சிக்கு பொது சுகாதாரப் பிரிவின் தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணி மேற்கொள்ள தேவையான கீழ்கண்ட விவரப்படியாக பொருட்களை சப்ளை செய்திட 11.05.2021 ஆம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் சப்ளை செய்திட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. அவை:

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் / முகவரி | சப்ளை செய்ய வேண்டிய பொருட்கள் விவரம் |
|---|---|---|
| 1. | ராஜேஸ்வரி L. நாதன்<br>கெமிக்கல்ஸ் & டிரேடர்ஸ்<br>No.115/90B, 2வது மாடி<br>பெரம்பூர், சென்னை – 11. | 1) மாஸ்க்<br>(3000 எண்ணிக்கை)–ரூ.7/–(+GST)<br>2) கிளவுஸ்<br>(2000 எண்ணிக்கை)–ரூ.16/–(+GST)<br>3) IR தெர்மாமீட்டர்<br>(35 எண்ணிக்கை) – ரூ.2200/–(+GST)<br>4) ஸ்பிரேயர் 16 லிட்டர்<br>(2 எண்ணிக்கை) – ரூ.1800/–(+GST) |
| 2. | SB & Co<br>No.1, ESI நகர்,<br>திருவாஞ்சேரி, சோலையூர்,<br>சென்னை –73 | 1) மாஸ்க்<br>(3000 எண்ணிக்கை)–ரூ.9/–(+GST)<br>2) கிளவுஸ்<br>(2000 எண்ணிக்கை)–ரூ.18/–(+GST)<br>3) IR தெர்மாமீட்டர்<br>(35 எண்ணிக்கை) – ரூ.2400/–(+GST)<br>4) ஸ்பிரேயர் 16 லிட்டர்<br>(2 எண்ணிக்கை) – ரூ.2100/–(+GST) |
| 3. | A.S. Developers<br>Old No.2/190 New No.1/324<br>ஆவடி ரோடு,<br>சென்னிக்குப்பம், | 1) மாஸ்க்<br>(3000 எண்ணிக்கை)–ரூ.22/–(GST உட்பட)<br>2) கிளவுஸ்<br>(2000 எண்ணிக்கை)–ரூ.10.50/–(GST |

| | | |
|---|---|---|
| | சென்னை-56. | உட்பட)<br>3) IR தெர்மாமீட்டர்<br>(35 எண்ணிக்கை)-ரூ.2300/-(GST உட்பட)<br>4) ஸ்பிரேயர் 16 லிட்டர்<br>(2 எண்ணிக்கை) - ரூ.2650/-(GST உட்பட) |

மேற்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றதில் வ.எண்.1ல் உள்ள ராஜேஸ்வரி L. நாதன் கெமிக்கல்ஸ் & டிரேடர்ஸ், சென்னை நிறுவனத்தாரின் குறைந்த விலைப்புள்ளியினை மன்ற அங்கீகாரத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண்.722/2020/எச்1

தனி அலுவலர்,
திருவத்திபுரம் நகராட்சி